நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள்.23.08.2018

2018ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 23.08.2018ம் தேதி திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு.சு.செளந்தரராஜன்,பி.ஏ.,
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்

**1)** இந்நகராட்சியில் குடிநீர் பணி பிரிவில், குழாய் பணி உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.வ.சிவன், த/பெ. வீரணத்தேவர் என்பவரால், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு WP(MD) No: 12007/2012ன் பேரில் தனியருக்கு சாதகமான தீர்ப்பாணை வழங்கப்பட்டதால், மேற்படி வழக்கின் பேரில் மேல் முறையீடு செய்யப்பட்டதில் வழக்கு கட்டணத் தொகை ரூ. 10,000/– மற்றும் இதரக் கட்டணத் தொகை ரூ.5000/–ம் சேர்த்து ரூ.15,000/– ஐ நகர்மன்ற வழக்கறிஞர் திரு.எம்.கருப்பசாமி பாண்டியன் அவர்கள் தனது 26.7.2018ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். இந்த வழக்குக் கட்டணம் ரூ.15,000/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 176 அனுமதிக்கப்பட்டது.**
அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண். 4012 /2014/சி1)**

**2)** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் புதிதாக JCB மற்றும் Jetting Cum Suction Machine வாங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட வாகங்களை இயக்குவதற்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர் (Texco) நல அலுவலகம், மதுரை நிறுவனத்திடம் நன்கு அனுபவமுள்ள மற்றும் கனரக வாகன உரிமம் உள்ள ஓட்டுநர்களை தினக்கூலி அடிப்படையில், தற்காலிகமாக கோரவும், அதற்காக இரண்டு ஓட்டுநர்களுக்கு மாதம் உத்தேச செலவினமாக ரூ.55,000/– வழங்கவும், மேலும் இச்செலவினத்தை 2018–2019ம் நிதியாண்டில் மேற்கொள்ளவும் மன்றத்தின்பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 177 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**
**அலுவலகக் குறிப்பு :-**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் மேற்கண்ட வாகனங்களை இயக்குவதற்கு Texco நிறுவனத்திடம் 2 ஓட்டுநர்கள் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பணிக்கு அனுப்ப கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 273/2017/எச்2)**

**3)**இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு வார்டு எண் 01 முதல் 33 வரையிலான பகுதிகளில் பொது சுகாதாரப் பணிகளுக்கும், டெங்கு ஒழிப்பு பணி மற்றும் ஏனைய தொற்று நோய் பரவுதலை தடுக்கும் பணிக்கும் கிருமி நாசினிகளான (நீர்த்த சுண்ணாம்புத்துள் 100டன் பிளீச்சிங் பவுடர் 10டன் பினாயில் 1000லிட்டர்) மார்ச் 2019வரை கையிருப்பு வைத்து பயன்படுத்திக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூபாய். 15,00,000/– 2018–2019 நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 178 அனுமதிக்கப்பட்டது.**

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண். 4172/2017/எச்1)**

**4)**போடிநாயக்கனூர் நகராட்சி வாகன எண். TN60 Q 5418 வண்டிக்கு வாகன காப்பீடு 19.08.2018 உடன் முடிவடைவதால் அதனை மீண்டும் புதுப்பிக்க செலவினம் ரூ. 25,003/– ஆகும். அந்த தொகையினை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**தீர்மான எண்: 179 அனுமதிக்கப்பட்டது.**
அலுவலகக் குறிப்பு : மன்றம் வழங்கலாம்.
**(ந.க.எண். 4173/2017/எச்1)**

**5)** அரசாணை (MS) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA IV) நாள். 19.07.2018ல் நகராட்சிகளுக்கு பொது சொத்துவரி சீராய்வு 01.04.2018 முதல் அமுல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து அரசாணை (MS) எண்.76ல் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA IV) நாள்.26.07.2018ல் குடியிருப்புகளுக்கு 50% விழுக்காடுகளுக்கு மிகாமலும், குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100% விழுக்காடுகளுக்கு மிகாமலும் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/RI நாள்.20.08.18ல், 01.04.2018 முதல் பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்வது குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் அனுப்பியுள்ளார். அதன் விபரம் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

**1. Mapping of Properties:-**

பொது சொத்துவரி சீராய்விற்கு கீழ்க்கண்ட ஆவணங்களை ஒப்புநோக்கி விடுதலின்றி சொத்து விபரங்களைப் பட்டியலிட ஆதாரமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

அ) வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், அலுவலகங்களிலுள்ள பதிவேடுகள் பெறப்பட வேண்டும்.

ஆ) சிவில் சப்ளை துறையிலுள்ள குடும்ப அட்டை பதிவேடுகள்.

இ) குடும்பங்கள் அடங்கிய பதிவேடுகள்.

ஈ) நகராட்சி அலுவலகங்களில் பதியப்படும் கேட்பு பதிவேடுகள்.

உ) வாக்காளர் பட்டியல்.

ஊ) கட்டிட அனுமதி பதிவேடு.

எ) வருவாய் மற்றும் நகரமைப்பு பிரிவு சரிபார்ப்பு பதிவேடு.

ஏ) அபாயகரமாா அருவருக்கத்தக்கமான லைசன்ஸ் பட்டியல்.

Master Register தயார் செய்யும்பொழுது விடுதலின்றி அனைத்துக் கட்டிடங்களும் பட்டியலிட வேண்டும். 24.08.2018 அன்று ஆரம்பித்து 24.12.2018 அன்று அனைத்துப் பணிகளும் முடித்து சிறப்பு அறிவிப்பு அனுப்ப வேண்டும்.

**2. படிவங்கள் அச்சடித்தல் விபரம் :-**

1. சொந்தத குடியிருப்பு கட்டிடங்கள் – Light Blue Colour
2. வணிக பயன்பாடு கட்டிடங்கள் – Light Pink Colour
3. தொழிற்கூட கட்டிடங்கள் – White Colour

**1. கட்டிடத்தின் வயதுக்கேற்ப தள்ளுபடி (Age of Building) :-**

| வ.எண் | விபரம் | தள்ளுபடி |
|---|---|---|
| 1 | 5 ஆண்டு வரை | இல்லை |
| 2 | 5 முதல் 15 ஆண்டு கட்டிடம் | 10% |
| 3 | 15 முதல 25 ஆண்டு கட்டிடம் | 15% |
| 4 | 25 ஆண்டுக்கு மேல் | 20% |

**2. கட்டிடத்திற்கேற்ப தள்ளுபடி (Nature of Building) :-**

| வ.எண் | விபரம் | |
|---|---|---|
| 1 | ஓடு, AC Sheet, G.A heet கூரை முதலியவை | 25% |
| 2 | ஓலை கூரை | 25% |

3. மத்திய அரசு கட்டிடங்கள் மற்றும் அரசு கட்டிடங்கள், அரசு சார் கட்டிடங்களுக்கு 50% உயர்வு செய்து வரிசீராய்வு செய்யப்பட வேண்டும்.

4. <u>கட்டிடங்களின் பயன்பாட்டிற்கேற்ப அடிப்படை மதிப்பு:</u>

புதிதாகக் கட்டப்பட சிமெண்ட் (RCC) குடியிருப்பின் வாடகை மதிப்பைக் கொண்டு கணக்கிடப்படுவதால் தொழிற்கூடங்கள் மற்றும் வணிக கட்டிடங்களுக்கு கீழ்க்கண்டவாறு அடிப்படை மதிப்பு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

**<u>I. தொழிற்கட்டிடங்கள் :-</u>** அடிப்படை மதிப்பில் இருமடங்கு

**<u>II. வணிக கட்டிடங்கள் :-</u>** மருத்துவமனை மற்றும் கல்யாண மண்டபம் உட்பட அனைத்து வணிக உபயோகக் கட்டிடங்கள் அடிப்படை மதிப்பில் 3 மடங்கு.

5. **01.04.2017 முதல் 31.03.2018 வரை புதிதாக அல்லது மறுநிர்ணயம் செய்து சொத்து வரி விதிக்கப்பட்டக் கட்டிடங்களுக்கு வரி சீராய்வு இல்லை.**
6. **அரசு அலுவலகங்களின் இயங்கி வரும் தனியார் கட்டிடங்களுக்கு செலுத்தப்படம் (actual) வாடகை மதிப்பீட்டில் சொத்துவரி நிர்ணயம் செய்ய வேண்டும்.**

மேற்கண்டவாறு 01.04.2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ள வரப்பெற்றுள்ள அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது வழிகாட்டுதல்கள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 180 பதிவு செய்யப்பட்டது. 01.04.2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளவும் அதற்கான அனைத்துச் செலவினங்களையும் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-**

1. அரசாணை (MS) எண்.73 மற்றும் அரசாணை (MS) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணைகள் மன்றம் பதிவு செய்யலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டுதல் நெறிமுறைப்படி 01.04.2018 முதல் இந்நகராட்சி எல்லைக்குள் அனைத்து கட்டிடங்களுக்கும் விடுபடாமல் சொத்து வரி சீராய்வு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3582 /2014/அ1)**

**6)** இந்நகராட்சி, பொது சுகாதாரப் பிரிவு மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி அவர்களின் உத்தரவின்படியும் ஆணையாளர், போடிநாயக்கனூர் நகராட்சி அவர்களின் அறிவுறுத்தலின்படியும் இந்நகராட்சி மூலம் உலக சுற்றுச்சூழல் தினம் பற்றிய கருத்தரங்கு ஜமீன்தாரிணி காமுலம்மாள் நினைவு மேல்நிலைப்பள்ளியில் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஜ.கா.நி.மேல்நிலைப்பள்ளி முதல் நகராட்சி வரை நடத்தப்பட்டது. இவ்விழாவில் கீழ்க்கண்டவாறு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | விளம்பர பதாகை | – ரூ. 180/– |
| 2. | துண்டு பிரசுரங்கள் | – ரூ. 1900/– |
| 3. | பள்ளி மாணவர்களுக்கு தேநீர் | – ரூ. 2500/– |
| | | – ரூ. 4580/– |

ஆக மொத்தம் ரூ. 4,580/– செலவினத்தை 2018–2019ம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 181 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி இச்செலவினம் திரு.லெனின் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. எனவே இத்தொகையினை திரு.லெனின் அவர்களுக்கு வழங்கலாம்.

**(ந.க.எண்: 1394/2018/H2)**

**7)**இந்நகராட்சியில் தமிழகஅரசின் உத்தரவின்படியும், இந்நகராட்சி ஆணையர்அவர்களின் அறிவுறுத்தலின் படியும், இந்நகராட்சி சார்பில் 'உலக டெங்கு தினம்' 16/5/2018 அன்று கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பேரணி நடத்தப்பட்டு பொதுமக்களுக்கு டெங்கு விழிப்புணர்வு நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு கீழ்க்கண்டவாறு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | விளம்பர பதாகைகள் | – ரூ. 540/– |
| 2. | துண்டு பிரசுரங்கள் | – ரூ. 1300/– |
| 3. | பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு தேநீர்செலவு | – ரூ. 2000/– |
| | | – ரூ. 3840/– |

மேற்கண்ட செலவினங்களை 2018–2019ம் நிதியாண்டில் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 182 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி இச்செலவினம் திரு.லெனின், துப்புரவு ஆய்வாளர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. எனவே இத்தொகையினை திரு.லெனின் அவர்களுக்கு வழங்கலாம்.

**(ந.க.எண்: 1290/2018/H2)**

**8)**இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படியும், நகர்நலஅலுவலர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், நமது அண்டை மாநிலமான கேரளாவில் “நிபா வைரஸ்” காய்ச்சலால் பாதிக்கப்பட்டு 10–ற்கும் மேற்பட்ட மக்கள் மரணமடைந்ததை தொடர்ந்து “நிபா வைரஸ்” காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு முகாம் கடந்த 22.5.2018 மற்றும் 23.5.2018 அன்று முந்தல் கிராம சோதனைச் சாவடி முன்பு நடத்தப்பட்டது. இவ்விழிப்புணர்வு முகாம் நடத்த கீழ்க்கண்டவாறு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | விழிப்புணர்வு பதாதைகள் | – ரூ. 1080/– |
| 2. | பந்தல் போடப்பட்டது | – ரூ. 1500/– |
| 3. | துண்டு பிரசுரங்கள் | – ரூ. 1900/– |
| | | – ரூ. 4480/– |

ஆக மொத்தம் ரூ. 4,480/– செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 183 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி இச்செலவினம் திரு.லெனின், அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. எனவே இத்தொகையினை திரு.லெனின், துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கு வழங்கலாம்.

**(ந.க.எண்: 1289/2018/H2)**

**9)**இந்நகராட்சியில், தமிழகஅரசின் உத்தரவின்படியும், இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுறுத்தலின் படியும், ‘உலக மலேரியா தினம்’ 28/4/2018 அன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கருத்தரங்கு மற்றும் விழிப்புணர்வு பணிகள் மற்றும் மருத்துவமுகாம் ஏற்பாடு செய்து நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு கீழ்க்கண்டவாறு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | பேணர் (3 எண்ணம்) | – ரூ. 540/– |
| 2. | துண்டு பிரசுரங்கள் (3000 எண்ணம்) | – ரூ. 1300/– |
| 3. | தேநீர்செலவினம் | – ரூ. 1200/– |
| | | – ரூ. 3040/– |

ஆக மொத்தம் ரூ. 3040/–ஐ 2018–2019ம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 184 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி இச்செலவினம் திரு.லெனின், துப்புரவு ஆய்வாளர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. எனவே இத்தொகையினை திரு.லெனின் என்பவருக்கு வழங்கவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 0965/2018/H2)**

**10)** போடிநாயக்கனூர் நகராட்சியில் உயிரியல் பல்வகைமை சட்டம் 2002 மற்றும் தமிழ்நாடு உயிரியல் பல்வகைமை விதிகள் 2004 மற்றும் 2017 பிரிவு 201ன் கீழ், அரசாணை எண் 137, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை (FRS) நாள்.09/01/2017–ல் அறிவுறுத்தியதற்கிணங்க "உயிரியல் பல்வகைமை குழு " (Bio-divossity) அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 185 அனுமதிக்கப்பட்டது.**

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4500/2018/H2 )**

**11)** இந்நகராட்சிக்கு உட்பட்ட 33 வார்டுகளில் உள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் மற்றும் பொதுமக்களுக்கு டெங்கு மற்றும் தொற்று நோய்கள் பரவா வண்ணம் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகளாக வழங்கப்படும் நிலவேம்பு கசாயம் கையிருப்பு குறைவாக உள்ளதால் 500கிலோ நிலவேம்பு கசாயம் பவுடர் வாங்க 27.07.2018 ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | SRI BALAJI MARKETING, Ayyampalayam. | 1 Kg | ரூ. 1900/– |
| 2. | SRI VINAYAKA PHARMA, Pollachi. | 1 Kg | ரூ. 2100/– |
| 3. | SRI MURUGAVEL AGENCIES, Pollachi. | 1 Kg | ரூ. 2150/– |

**தீர்மான எண்: 186 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** 1. ஒப்புதலளிக்கலாம்.

2. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஸ்ரீபாலாஜி மார்கெட்டிங், அய்யம்பாளையம் நிறுவனத்திற்கு பொது சுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான செலவினங்களை 2018–2019ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 1987/2018/H2)

**12)** போடிநாயக்கனூர் நகராட்சிப் பகுதியில் சமீபத்தில் பெய்த மழை மற்றும் காற்றினால் சாய்ந்த மரத்தின் கிளைகளை அகற்றவும் மற்றும் தாழ்நிலை நீர் தேக்க தொட்டி வளாகத்திலும் அடுக்கி வைக்கப்பட்டுள்ள மரத்துண்டுகளை எடுத்துக் கொள்வதற்கு 31.07.2018 அன்று பொது ஏலம் விடப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஏலம் கோரப்பட்டது.

| வஎண் | பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திரு. முத்துராமலிங்கம் பங்காரு மேற்கு தெரு | **10,500/–** |
| 2. | திரு. காளையன் ரத்தினம் பங்காரு மேற்கு தெரு | **10,400/–** |

**தீர்மான எண்: 187 அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** 1. மேற்காணும் பொது ஏலத்தில் அதிகபட்ச தொகையாக கோரிய திரு. முத்துராமலிங்கம் என்பவரின் ஏலத்தொகை ஏற்கலாம்.

2. மன்ற அனுமதி எதிர்நோக்கி அவசர அவசியம் கருதி திரு. முத்துராமலிங்கம் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.யக்கனூர் வழங்கிய குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 1248/2018/இ1)

**13)** போடிநாயக்கனூர் நகராட்சி முதல்நிலை நகராட்சியாக 25.05.1938 செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் 7.23 சதுர கி.மீ பரப்பளவு கொண்டது. 33 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. நகராட்சியில் மக்கள்தொகை 2014 கணக்கெடுப்பின்படி 75,665 ஆகும். நகராட்சி பகுதியில் தினசரி மார்க்கெட் மற்றும் வாரச்சந்தை நடைபெற்று அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர் 146 ஆகும். இதில் 67 பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். 79 பணியிடம் காலியாக உள்ளது. மேற்படி பணியிடம் பூர்த்தி செய்ய அரசாணை எண்.101. நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.04.1997ன்படி நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர் அளவுகோளின்படி 270 பணியிடம் ஆகும். அதில் 146 நிரந்தர துப்புரவு பணியிடங்கள் போக மீதம் 54 துப்புரவு பணியிடங்களில் ஒப்பந்ததாரர் வாயிலாக வெளியாட்கள் (Out Sourcing) மூலம் செயல்பட்டு வருகிறது. இதில் மீதமுள்ள 70 பணியிடங்களை வெளியாட்கள் மூலம் (Out Sourcing) நகர்மன்றம் தனது தீர்மான எண்.31, நாள்.30.01.2015ல் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் தீர்மானிக்கப்பட்டு இவ்வலுவலக கடித எண்.371/2015/எச்1, நாள்.06.02.2015ல் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் மு.மு.எண்.6004/பி3/2015,நாள்.24.04.2015ல் செயல்முறை உத்தரவில் 70 பணியாளர்களை வெளியாட்கள் மூலம் (Out Sourcing) 31.07.2018வரை மூன்று ஆண்டு காலத்திற்கு வைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் அவர்லேண்ட் இன்ஜீனியரிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு, இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.371/2015/எச்1, நாள்.03.07.2015ல் வெளியாட்கள் மூலம் பணி அமர்த்த அனுமதி வழங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக ஒப்பந்தம் ஒவ்வொரு ஆண்டும் நீட்டிப்பு செய்து 31.07.2018 வரையிலான மூன்று ஆண்டு நிறைவடைந்து விட்டது.

மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணிக்காலம் 31.07.2018 உடன் முடிவடைந்து விட்டதால் அந்நிறுவனம் 16.07.2018 கடிதத்தில் கால நீட்டிப்பு செய்ய விருப்பம் அளித்துள்ளார். 01.08.2018 முதல் 31.10.2018 வரை மாவட்ட ஆட்சியர், தேனி அவர்கள் நிர்ணயிக்கும் தினக்கூலி அடிப்படையில் ரூ.26.48 லட்சம் திதி ஒதுக்கீட்டு செய்ய மன்றம் தீர்மான எண். 174, நாள். 10.08.2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் பணியிடங்கள் பொது சுகாதாரப் பணிகளின் அவசியம் கருதி மேலும் மூன்று ஆண்டுகளுக்கு தேவைப்படுவதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**தீர்மான எண்: 188 அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-**

1. 70 துப்புரவு பணியிடங்கள் வெளியாட்கள் மூலம் (Out Sourcing) 01.08.2018 முதல் 31.10.2018 வரை அவர்லேண்ட் இன்ஜீனியரிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்களுக்கு நிர்வாக காரணங்களுக்காக காலநீட்டிப்பு செய்தமைக்கு பின்னேற்பு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் பெறலாம்.
2. அத்தியாவசியமாக 70 துப்புரவு பணியிடங்கள் வெளியாட்கள் மூலம் (Out Sourcing) வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி கோரி அமர்த்திக் கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம்.

**(ந.க.எண். 3491/2018/எச்2 )**

**14)**போடிநாயக்கனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு 5 எண்ணம் எடை இயந்திரம் வாங்குவதற்கு பெறப்பட்ட விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | மதியழகன் ஸ்டோர், மதுரை ரோடு,<br>தேனி. | ரூ. 850/– |
| 2. | M.S ஹார்டுவேர்ஸ்,<br>பெரியகுளம் ரோடு, தேனி. | ரூ. 950/– |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய மதியழகன் ஸ்டோர்ஸ் என்கின்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 189 அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-**
1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதரப் பணிகளின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதை ஏற்கலாம்.

**(ந.க.எண். 22101/2018/H2 )**

**15)** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் இயங்கிவரும் TATA ACE வாகனத்திற்கு (TN60 S 1992) தகுதி சான்று மே மாதத்துடன் முடிவடைந்ததால் வண்டியில் உள்ள பழுதுகளை சரிசெய்து மீண்டும் தகுதி சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.1,20,000/-ஐ 2018–2019 நிதியாண்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**தீர்மான எண்: 190 அனுமதிக்கப்பட்டது.**

<u>அலுவலகக் குறிப்பு</u>**:-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 18151/2018/H2 )**

**16)**இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் இயங்கிவரும் டம்பர் ப்ளேசர் வாகனத்திலுள்ள பழுதூக்கும் ஜாக்கி உடைந்து விட்டதால் அதை மாற்றி புது ஜாக்கி பொருத்த உத்தேச செலவினம் ரூ.35,000/-க்கும் அதனை 2018–2019 நிதியாண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 191 அனுமதிக்கப்பட்டது.**

<u>அலுவலகக் குறிப்பு</u>**:-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4568/1/2018/H2 )**

**17)** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்குத் தேவையான எடை இயந்திரம் 5 எண்ணம் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.5,500/-க்கும் அதனை 2018–2019 ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 192 அனுமதிக்கப்பட்டது.**

அலுவலகக் குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண். 2210/2018/H2 )**

**18)**போடிநாயக்கனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மைத் திட்டப்பணிகளுக்கு பயன்படுத்தக் கூடிய தளவாடங்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்திடும் வகையில் வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/-க்கும் அதனை 2018–2019 ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
**தீர்மான எண்: 193 அனுமதிக்கப்பட்டது.**
அலுவலகக் குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண். 2124/2018/H2 )**

**19)**போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான காலி இடங்கள் மற்றும் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடங்களை ஆக்கிரமிப்பு ஏற்படாமல் பாதுகாக்கும் பொருட்டு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுவேலி அமைக்க இந்நகர் மன்ற தீர்மான எண்.148, நாள்.29.06.2018 அனுமதியின்படி, 27.07.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. எல். எல்லப்பன், ஒப்பந்தகாரர், போடிநாயக்கனூர். | 0.04 % குறைவு |
| 2. | திரு. ப. நடராஜன், ஒப்பந்தகாரர், போடிநாயக்கனூர். | 1.50 % அதிகம் |

**தீர்மான எண்: 194 திரு. எல். எல்லப்பன், ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**அலுவலகக் குறிப்பு :-** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. எல். எல்லப்பன், ஒப்பந்தகாரர், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
( ந.க.எண். 3271/2018/இ1)

**20)**போடிநாயக்கனூர் நகராட்சி 15ம் பகுதி நகராட்சி ஆரம்பப் பள்ளி வளாகத்தினுள் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வரும் வட்டாரக் கல்வி அலுவலகத்தில் பராமரிப்பு பணிகள் செய்யவும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 1.50 இலட்சத்தினை பொது நிதியில் இருந்து செலவு செய்ய கொள்ள நகர்மன்ற தீர்மானஎண்.135, நாள்.29.06.2018 அனுமதி வழங்கியதன் அடிப்படையில் 27.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வந்த இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. எல். எல்லப்பன், ஒப்பந்தகாரர், போடிநாயக்கனூர். | 0.03 % குறைவு |
| 2. | திரு. ப. நடராஜன், ஒப்பந்தகாரர், போடிநாயக்கனூர். | 1.05 % அதிகம் |

**தீர்மான எண்: 195 திரு. எல். எல்லப்பன், ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய எல். எல்லப்பன், ஒப்பந்தகாரர், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 3275/2018/இ1)

**21)** போடிநாயக்கனூர் நகராட்சி 17வது வார்டு ஆதிசங்கரர் தெருவில் புதிய குடிநீர் மெயின் பதிக்கவும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.0.25 இலட்சத்தினை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானஎண்.136, நாள்.29.06.2018 அன்று அனுமதி வழங்கியதன் அடிப்படையில் 27.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. ப. நடராஜன், ஒப்பந்தகாரர், போடிநாயக்கனூர். | 0.02% குறைவு |
| 2. | திரு. எல். எல்லப்பன், ஒப்பந்தகாரர், போடிநாயக்கனூர். | 1.20 % அதிகம் |

**தீர்மான எண்: 196 திரு. ப.நடராஜன், ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்ட்து.**

**அலுவலகக் குறிப்பு :-** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. ப. நடராஜன், ஒப்பந்தகாரர், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 2017/2018/இ1)

**22)** போடிநாயக்கனூர் நகராட்சி 10வது வார்டு வ.உ.சி நகரில் உள்ள நகராட்சி பூங்காவிற்கு தண்ணீர் வசதி இல்லாததால் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்யவும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.75 இலட்சத்தினை பொதுநிதியில் இருந்து செலவு செய்ய நகர்மன்ற தீர்மானஎண்.137, நாள்.29.06.2018 அன்று அனுமதி வழங்கியது. அதன் அடிப்படையில் 27.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரங்கள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. ப. நடராஜன், ஒப்பந்தகாரர், போடிநாயக்கனூர். | 0.01% குறைவு |
| 2. | திரு. எல். எல்லப்பன், ஒப்பந்தகாரர், போடிநாயக்கனூர். | 0.70% அதிகம் |

**தீர்மான எண்: 197 திரு. ப.நடராஜன், ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்ட்து.**

**அலுவலகக் குறிப்பு :-** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. ப. நடராஜன், ஒப்பந்தகாரர், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 3274/2018/இ1)

**23)** போடிநாயக்கனூர் நகராட்சி பேருந்து நிலைய மேற்கு நுழைவு வாயில் அருகே ரூ.85,000/– மதிப்பீட்டில் சிறுபாலம் கட்டும் பணி மேற்கொள்ள 29.6.2018 ஆம் தேதிய இந்நகர்மன்ற தீர்மானஎண்.141–ன் படி,27.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின்விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. சௌந்தரராஜன், ஒப்பந்தகாரர்,<br>போடிநாயக்கனூர். | 0.05%<br>குறைவு |
| 2. | திரு.பநடராஜன், ஒப்பந்தகாரர்,<br>போடிநாயக்கனூர். | 1.35 %<br>அதிகம் |

**தீர்மான எண்: 198 திரு. சௌந்தரராஜன், ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.சௌந்தரராஜன், ஒப்பந்தகாரர், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 3272/2018/இ1)

**24)** போடிநாயக்கனூர் நகராட்சிப் பகுதியில் உள்ள பூங்காவில் உருவாகும் குப்பைகளை உருவாகும் இடத்திலேயே அழிக்கும் பொருட்டு (Onsite Composite) சோணைமுத்து பூங்கா மற்றும் வெங்கிட்டம்மாள் பூங்கா மற்றும் 14 பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் சிறிய அளவிலான உரமாக்கும் தொட்டிகள் அமைக்கவும் அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.80 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.140, நாள்.29.06.2018 அன்று அனுமதி வழங்கியதன் அடிப்படையில், 27.07.2018 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | எல். எல்லப்பன், ஒப்பந்தகாரர்,<br>போடிநாயக்கனூர். | 0.04 %<br>குறைவு |
| 2. | ப. நடராஜன், ஒப்பந்தகாரர்,<br>போடிநாயக்கனூர். | 1.20%<br>அதிகம் |

**தீர்மான எண்: 199 திரு. எல். எல்லப்பன், ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. எல். எல்லப்பன், ஒப்பந்தகாரர், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 3273/2018/இ1)

**25)** போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு செய்ய குளோரின் சிலிண்டர் நிரப்புதல் பணி **(2018–19)** ஆண்டுக்கு ரூ.**3.00/–** இலட்சம் செலவில் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட இந்நகர் மன்ற தீர்மான எண்.**160**, நாள்.**29.06.2018**ன்படி, **31.07.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. | M/s SHRI SATHYA DYES AND CHEMICALS,<br>AUNDIPATTI. |
| 2. | M/s PEOPLE CHEMICAL INDUSTRIES,<br>AUNDIPATTI. |

**தீர்மான எண்:200 மெஸர்ஸ் ஸ்ரீ சத்யா டைஸ் அன்டு கெமிக்கல்ஸ், ஆண்டிபட்டி அவர்களது குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s SHRI SATHYA DYES AND CHEMICALS, AUNDIPATTI. அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**(ந.க.எண். 2565 /2018/இ1)**

**தனிஅலுவலர் (ம) ஆணையாளர்**
**போடிநாயக்கனூர் நகராட்சி.**